யுகம்

28

பெண்கள் செய்தி மடல்
2020

Integrated activity
ஒருங்கிணைந்த செயற்பாடு

WE EFFECT

WOMEN'S EFFORT IS SOCIETIE'S SUCCESS
KAVIYA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுகம்-28

உன்னால் முடியும் பெண்ணே!

காவியா சுய அபிவிருத்தி
பெண்கள் நிலையம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுகம் – 28

மலர் வெளியீட்டுக்குழு

ஆசிரியர் : யுகம் பத்திரிகைக்குழு

அட்டை ஓவியம் : காவியா செயற்பாடுகள்

வெளியீடு : காவியா சுய அபிவிருத்தி பெண்கள் நிலையம்

கணனி வடிவமைப்பு : S.P.அலெக்ஸ்

அச்சுப்பதிப்பு : Omega Screen Digital Printing

தொலைபேசி இலக்கம் : 077 2391883

அணுசரனை : WE EFFECT

இப்பிரசுரமானது முழுமையாகவோ அல்லது புத்தகம் என்ற வகையிலோ WE EFFECT நிறுவனத்தின் நிதி அணுசரனையுடன் அச்சிடப்பட்டுள்ளது. இதன் உள்ளடக்கமானது குறித்த ஆசிரியருக்கே உரித்தாகும்.

காவியா சுய அபிவிருத்தி பெண்கள் நிலையம்
53/1, புதிய எல்லை வீதி, சின்ன ஊறணி,
மட்டக்களப்பு, இலங்கை.
065 2227528, 0772241143
மின் அஞ்சல் : kaviyasdwc@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுகம் உள்ளே ....

விடயம்	பக்க எண்
வாழ்த்துச் செய்தி : நிறைவேற்றுப் பணிப்பாளர்	01
வீட்டுத்தோட்டம்	02
16 நாட்கள் செயற்பாட்டு செயல்வாதம்	04
திறப்புவிழா - நாச்சியார் பாரம்பரிய உணவகம்	06
காவியா 18 வருடப் பூர்த்தி	07
நடமாடும் சேவை	08
வெளிப்பாட்டு வருகை	09
Covid -19 சார்ந்த செயற்பாடுகள்	10
விவசாயப்பண்ணை ஆரம்பித்தல்	11
வியாபார உலகு	12
நன்னீர் மீன் விற்பனை நிலையம்	13
பயிர்வகை உற்பத்தி நிலையம்	14
வன்முறை இல்லா வாழ்வு	15
பெண்கள் சார்ந்த சமூகப்பிரச்சினைகள்	16
பகல் கனவு	20
இயற்கை விவசாயம்	25
மனம் உண்டால் இடமுண்டு	26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யுகம் – 28 மலர் வெளியீட்டின் மூலம் நான் உங்களுடன் பகிர்ந்து கொள்வது இன்று யுகம் – 28 இதழ் வெளியிடுவதற்கு இதுவரையும் நீங்கள் எமது நிறுவனத்திற்கு வழங்கிய அனைத்து விதமான ஒத்துழைப்புக்கும் ஆதரவுக்கும் எமது நிறுவனம் சார்பாக இந்த யுகம் இதழ் மூலம் எங்கள் நன்றியை தெரிவிப்பதோடு, எங்களது நிறுவனத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலக பிரிவுகளிலும் வழங்கப்பட்ட உதவிகள், அவற்றின் மூலம் வாழ்க்கையில் முன்னேறியவர்கள், சாதனை படைத்த பெண்கள் பற்றியும் அவர்களது வாழ்க்கை அனுபவங்களையும் சாதனைகளையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்விதழை பார்ப்பவர்கள், வாசிப்பவர்கள் உங்களது வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க நினைத்தால் எங்களது நிறுவனத்துடன் இணைந்து, கொண்டு அல்லது அதற்குரிய சரியான இடத்தை தெரிவு செய்து உங்களது வாழ்க்கையில் முன்னேற வேண்டும். இவ்வாசகத்தை வெறும் வாசகமாக இல்லாமல் சாதனையாளராக மாற உங்களுக்கு உதவும் என்பது எமது நம்பிக்கையாகும்.

திருமதி. யோகமலர் அஜித்குமார்
நிறைவேற்றுப் பணிப்பாளர்
காவியா சுய அபிவிருத்தி பெண்கள் நிலையம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுத் தோட்டம்

கொரோனா காலங்களில் நாம் வெளியில் செல்ல முடியாமல் பெருப்பாலான காலம் வீட்டிலேயே முடங்கி இருந்தோம் என்பதனை எவராலும் மறுக்கவும், மறக்கவும் முடியாது. இவ்வாறான கொரோனா காலமானது பல்வேறு படிப்பினைகளை கற்றுத்தந்திருந்தது. அதில் ஒன்று வீட்டுத்தோட்டம் செய்தல்.

நாம் அனைவரும் சிறுவயதில் வீட்டுத்தோட்டம் செய்த அனுபவம் உடையவர்களே, இருந்தும் அவசர உலகில் வேகமாக ஓடுபவர்களாக மாறிய நாம் வேலைத்தளம், வீடு என வேகமாக ஓடலானோம். அவ் ஓட்டத்தில் ஒய்வு நேர செயற்பாடுகளை முற்றிலுமாய் மறந்தவர்களாக வெறுமனே தொலைக்காட்சி, சமூக வலைத்தளங்களுக்குள் தொலைந்திருந்தோம் என்பதே உண்மை.

நேரங்கள் மீதமான, பொருளாதாரங்கள் முற்றிலுமாய் மூடப்பட்ட இவ் வேளையில் பலரும் வீட்டுதோட்டம் செய்ய தொடங்கி இருந்தனர். வீட்டுக் காணிகளின் சிறு சிறு நிலப்பரப்பில் மரக் கன்றுகளை நட்டு பேணி வளர்க்க ஆரம்பித்தனர். பாடசாலை, தனியார் வகுப்புக்கள் இன்றி இருந்த சிறுவர்களும் பெரியோர்களுடன் இணைந்து வீட்டுத்தோட்ட பராமரிப்பில் மகிழ்ச்சி கொண்டிருந்தனர்.

மரங்களை நட்டு பராமரித்தல் என்பதானது ஒரு அழகிய கருமமாகும், மரம் வளர வளர மனதில் எழும் சந்தோசத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. அதனோடு ஒரு குழந்தை ஒரு மரத்தை ஒழுங்குற பேணுகின்றது எனின் அதனை விட அனுபவம் சார் ஒழுங்கு ரீதியான கற்கையினை எதிலுமே கற்று விட முடியாது. அதனோடு குடும்பமாய் பராமரித்த தோட்டத்து உணவுகளை சமைத்து உண்கின்ற போது குடும்ப ஒற்றுமை, சந்தோசம் என்பன அதிகரிக்கும் என்பது உறுதி. வீட்டுக்குள் முடங்கி இருந்த சூழலில் வீட்டு வன்முறைகள் அதிகரித்தன என சர்வதேச புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன, இருந்தும் எம் சூழலில் அவற்றைக் குறைக்க இவ்வாறான பயனுள்ள பொழுது போக்குகள் பெரிதும் உதவி புரிந்தன என்பது உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுடன் வீட்டில் சேருகின்ற தேவையற்ற கழிவுகளை செவ்வனே முகாமை செய்ய அவற்றை பசளைகளாக்கி அவற்றிலிருந்து பயன் பெற மற்றும் நாம் நாளாந்தம் பயன்படுத்தும் தேவையற்ற பொலித்தீனின் பெரும் பங்குகளை அறிந்து கொள்ள அவற்றை நீக்குவதில் ஏற்படும் சிக்கல்களை விளங்கிக் கொள்ளல் போன்ற பல்வேறு அறிவுகளை எமக்கூட்டியது எனலாம்.

அனைத்து உற்பத்திகளும் பாரிய கம்பனிகளின் கைகளுக்குள் செல்ல நாம் வெறும் கூலி ஆட்களாகவும், நுகர்வோராகவும் மாறி வரும் சூழலில் எம் விவசாயமும் அவர்களது கைகளுக்குள் அகப்பட்டுக் கொள்வதற்கான சூழலே காணப்படுகின்றது. ஒவ்வொரு விளைச்சலுக்கு விதைகளை வாங்கி நட வேண்டியவர்களாக நாம் இன்று மாற்றப்பட்டுள்ளோம், பல்வேறு பசளை கிருமி நாசினிகள் என அவர்களை நம்பியவர்களாக நாம் மாற்றப்படுகின்றோம். இவ்வாறான சூழலானது உலகிற்கும், உயிரியலுக்கும் உகந்ததல்ல. எனவே இக்கொரோனா கால அனுபவமானது எமக்கு மிக அவசியமானது. வீட்டில் கிடைத்த, அயலவர்கள் தந்த விதைகள், இயற்கை கழிவுகளை பசளைகளாக இடல், இயற்கை கிருமி நாசினிகள் (சில இயற்கையான தாவரங்கள் நடல், வேப்பம் இலை போன்றன) மூலமாக வெற்றி கொண்டு பெற்ற விளைச்சல் எம்மை ஆரோக்கிய உணவு உற்பத்திக்கான அடுத்த நிலைக்கு அழைத்துச் சென்றிருக்கின்றது என்பது உறுதி.

சி.ஜெயபிரதாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புவார செயல்வாதமானது ஒவ்வொரு வருடமும் நவம்பர் 25 தொடக்கம் டிசம்பர் 10 வரை அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இதன் தொடக்க நாளான 25.11.2020 அன்று காவியா பெண்கள் நிறுவனத்தினூடாக பல செயற்பாடுகளுடன் தொடக்க நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திலும் "பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்போம்." எனும் வாசகம் பொறிக்கப்பட்ட வெள்ளப்பட்டி அணிவித்து தொடங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திலும், பேரில்லாவெளி கிராமத்திலும், "மகிழ்ச்சியான குடும்பம் என்னிலிருந்து ஆரம்பமாகின்றது" எனும் கருப்பொருளிற்கமைய வன்முறை அற்ற வாழ்வுக்கான பல நிகழ்வுகள் இடம் பெற்றன.

இதில் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவள ஆலோசகர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், காணிப் பிரிவு அதிகாரிகள், காவியா நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மக்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.

இதில் கோறளைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமமான பேரில்லாவெளி மக்களுக்கு விழிப்புணர்வு நாடகம் மற்றும் காணிப்பத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழாங்குவதற்கான ஆவணமும் செய்யப்பட்டது.



இதில் விசேடமாக "கொரோனா கற்றுத் தந்த பாடங்கள்" எனும் தலைப்பில் வீதி நாடக ஆற்றுகையும் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாச்சியார் பாரம்பரிய உணவகம்

மற்றுமொரு கிளை கிரானில்

பெண் தலைமை தாங்கும் குடும்பங்களில் வாழ்கின்ற பெண்களை ஊக்குவிக்கும் வகையில் எமது காவியா நிறுவனத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற நாச்சியார் பாரம்பரிய உணவகத்தின் மற்றுமொரு கிளையாக கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சின்னவேம்பு பிரதேசத்தில் கார்த்திகை மாதம் பதினொராம் திகதி 2020 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் வீ எபக்ட் நிறுவனத்தின் தேசிய திட்ட இணைப்பாளர் பிரியந்த ஜெயகொடி, பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு, காவியா பெண்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி. யோகமலர் அஜித்குமார், காவியா பெண்கள் அமைப்பு ஊழியர்கள், மற்றும் பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மேலும் இவ்நாச்சியார் உணவகத்தில் காலை, மதிய, இரவு நேர உணவுகள், போசாக்கான கஞ்சி, fresh juice போன்ற பலவிதமான உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

விசேட வைபவங்களுக்கான சிற்றூண்டி மற்றும் மதிய, இரவு உணவுகளுக்கான ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். உரிய நேரத்திற்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:

தொ.பே : 0652227528
மின்னஞ்சல் முகவரி:
Kaviyasdus@yahoo.com
முகவரி: 53/1, 1ம் குறுக்கு,
புதிய வீதி, சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியா 18 வருட பூர்த்திக் கொண்டாட்டம்

காவியா சுய அபிவிருத்தி பெண்கள் நிறுவனமானது 29.11.2020 அன்று தனது 18 வருட பூர்த்தியினைக் கொண்டாடியது. இதில் காவியா சுய அபிவிருத்தி பெண்கள் நிறுவன இயக்குனர் திருமதி. யோகமலர் அஜித்குமார் மற்றும் சகல ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

காவியா அமைப்பானது கடந்த 18 ஆண்டுகளாக பல்வேறு சேவைகளை மக்களுக்கு பெற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இதன் மூலமாக பலர் வாழ்வாதாரங்களைப் பெற்று பயனடைந்திருக்கின்றனர். மேலும் பல வாழ்வாதார வசதிகள் இன்றி அவதியுறுபவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக இன்றும் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்றது.

காவியா அமைப்பானது பெண்கள், ஆண்கள், இளைஞர்கள் என பலருடனும் பல்வேறு தளங்களிலும் வேலை செய்து வருகின்றது. இதன் மூலமாக குடும்ப பொருளாதார முன்னேற்றம், பால்நிலை சமத்துவம் போன்ற பல்வேறு அடைவுகளை நோக்கமாக கொண்டே செயற்பட்டு வருகின்றது.

அத்துடன் கூட்டுறவு சங்கங்களை அமைத்து, அதிலுள்ள உறுப்பினர்களிடம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதும் அச்சேமிப்புகளினை குறித்த சங்கத்து உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக வட்டியின்றிய கடனாக வழங்கி, வசூலித்தல் மூலமாக கூட்டுறவுசார் நன்மைகளையும் அனுபவிப்பதற்கு குறித்த சங்கங்களுக்கு முகாமை செய்கின்றதுடன் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் அபிவிருத்திக்காக பாரிய முதலீட்டு உற்பத்திக்கான உதவிகளை செய்தல் என பல்வேறு வழிகளிலும் துணை நிற்கின்றது.

அத்துடன் பெண்கள்சார் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பல்வேறு அதிகாரிகளையும் இணைத்து வலையமைப்பு கூட்டங்களை ஒழுங்கு செய்தல், சிறந்த வளவாளர்கள் மூலமாக ஆலோசனை வசதிகளை வழங்குதல், தேவையேற்படின் சட்ட உதிவிகள் மூலமாக பெண்களுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் என வறிய குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு பல்வேறு வழிகளிலும் துணை நிற்கின்றது எனலாம்.

சுமார் 5000 இற்கும் மேற்பட்ட பயனாளிகளின் சுய உற்பத்திகளுக்கு உதவுவதுடன், உற்பத்திகளிற்கான சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதிலும் பிரதான பங்கினை ஆற்றி வருகின்றது. தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் ஆற்றும் என்பது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காவியா சுய அபிவிருத்தி பெண்கள் அமைப்பானது பல இடங்களில் நடமாடும் சேவையினை ஒழுங்கு செய்து அதன் மூலமாக பொதுமக்களுக்கு பல்வேறு சேவைகளை பெற்றுக்கொடுத்திருந்தது.

இவ்நடமாடும் சேவையானது கிரான், செங்கலடி, களுவாஞ்சிக்குடி, கரடியனாறு, வாகரை போன்ற பிரதேசங்களில் நடாத்தப்பட்டது. இதன் மூலமாக மக்கள் அதுவரை காலமாக பெற்றிருக்காத பிறப்புச் சான்றிதழ், திருமண சான்றிதழ், மரணப் பதிவு சான்றிதழ் போன்றவற்றினை எதுவித கட்டணம் செலுத்தல்களும் இன்றி இலவசமாகப் பெற்றுக் கொண்டனர்.

யுத்த இடர், வறுமை போன்ற காரணங்களால் சேவையைப் பெறுவதில் ஏற்பட்ட பல்வேறு தடைகளின் மூலமாக அதுவரை காலமாக அவ் ஆவணங்களை பெற்றிருக்காமையும் அதனை அரசு அதிகாரிகளும் ஆவணம் செய்திருக்காமையினாலும் பல்வேறு சேவைகளை முன்னெடுப்பதில் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி இருந்த போதும் இவ் நடமாடும் சேவை மூலமாக அப்பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EXPOSURE VISITS

வெளிப்பாடு வருகைகளை ஏற்பாடு செய்வதன் மூலம் ஒரு இடத்தில் வசிக்கும் மக்கள் மற்றொரு இடத்திற்குச் சென்று மற்ற சமூகத்தின் மேம்பாட்டு நடவடிக்கைகளைக் கவனிக்கவும் கற்றுக்கொள்ளவும் முடியும். வெளிப்பாடு வருகைகளின் நோக்கம் உங்கள் சொந்த சமூகத்திற்கு வெளியே உள்ள மற்றவர்களின் அனுபவத்திலிருந்து நேரடி தொடர்பு மூலம் கற்றுக்கொள்வதாகும்.

இவ்வாறான வெளிப்பாடு வருகை ஒன்றினை காவியா அமைப்பு கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்தது. இதில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பயனாளிகள் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்டு அம்பாறையில் சுய தொழிலாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது சந்தையில் வெற்றிநடை போடுகின்ற ஏழு உற்பத்தி வணிகங்களை பார்வையிட்டதுடன் அவர்களது அனுபவ பகிர்வுகளையும் பெற்றுக் கொண்டனர்.

இதன் போது துனியா சுவீட் சென்டர், East Star கைத்தறி புடவைக்கடை, NRA பழச்சாறு உற்பத்தி நிலையம், AJ - ஆச்சி உற்பத்தி நிலையம், யோக்கட் உற்பத்தி நிலையம், Anvi காலனி உற்பத்தி நிலையம் மற்றும் கைப்பணி பயிற்சி நிலையம் போன்ற பல விடயங்களை பார்வை இட்டதுடன் அவர்களுடன் பல்வேறு அனுபவம் சார் பகிர்வுகளையும் பகிர்ந்திருந்தனர்.

இவ் வெளியீட்டு வருகையானது இலகுவாக பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொள்ள வழிவகிக்கின்றது. அத்துடன் அனுபவம் சார்ந்த பகிர்வானது அவர்கள் செய்கின்ற சுய தொழில் நடவடிக்கையினை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல பயனுள்ளதாக அமைவதுடன், சந்தைப்படுத்தலுக்கான பல்வேறு தகவல்களும் இவர்களுக்கிடையில் பகிரப்பட்டதனால் எதிர்வரும் காலங்களில் அவர்களின் தொழிலினையும் அடுத்த கட்டிடத்திற்கு இலகுவாக எடுத்துச் செல்ல முடியும் என நம்பிக்கை தெரிவித்தனர்.

இதே போன்று இன்னும் சில வெளிப்பாட்டு வருகைகளை காவியா அமைப்பானது இக்காலப்பகுதியில் ஒழுங்கு செய்து அதன் மூலமான பல்வேறு நன்மைகளை மக்களுக்கு வழாங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த குறிப்பிட்ட காலப்பகுதியானது கொவிட் - 19 தொற்று காலப்பகுதி ஆகையினால் பல்வேறு சிக்கல்களுடனேயே செயற்பாடுகளை தொடர வேண்டிய நிலை ஏற்பட்டது. இது எமது நாட்டிற்கு மட்டுமின்றி சர்வதேசம் சார்ந்த ஒரு பொதுப் பிரச்சினை தான். இது பல மாதங்கள் தாண்டி இன்றைய காலப்பகுதியிலும் மக்களை அச்சுறுத்திய வண்ணமே உள்ளதை யாருமே மறுக்க இயலாது.

இக்கொவிட் இன் பல்வேறு தீமைகள் இருப்பினும் பிரதான தீமையாக அடையாளப்படுத்தக் கூடியதாக அமைவது சுய தொழில் செய்வோரின் வருமான வழிகள் மூடப்பட்டதே. இந் நிலைமையின் கீழ் குறைந்த வருமானம் பெறும் தொழில் செய்வோர் மிகவும் வறுமையான நிலையை அடைந்துள்ளனர். மூடப்பட்ட வீடுகளுக்குள் மிகவும் கஷ்டப்பட்டு வாழலானார்கள். இவ்வாறான சூழ்நிலையில் இவர்களுடன் பணி புரிதல் ஆனது மிகவும் அவசியமானதே.

காவியாவானது சமூகங்களுடன் நேரே தொடர்புபடுவது இவ்வாறு கஷ்டமுறுபவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி நீடிய வாழ்வுக்கான நிலைபேறுடைய அபிவிருத்தியை அவர்களுக்கு வழங்குவதற்கே. எனினும் இவ்வாறான சூழலில் பல சவால்களின் மத்தியிலேயே மக்களுடன் பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதுடன் அதனையும் திறன்பட செய்திருந்தனர் காவியா ஊழியர்கள்.

சமூக இடைவெளியுடன் மட்டுப்படுத்தப்பட்ட சிறு சிறு தொகையினராகவே கூட்டங்கள் நடாத்தப்பட்டன, தேவையற்ற ஒன்று கூடல்கள் தவிர்க்கப்பட்டன, தகவல் சேகரிப்புக்கள் சார்ந்த யாவும் அவர்களது வீடுகளுக்கு களப்பணியாளர்கள் நேரே சென்று சமூக இடைவெளிகளுடனேயே சேகரித்துக் கொண்டனர். இவை யாவும் அப் பிரதேசத்தின் பொதுச் சுகாதார பரிசோதரின் அறிவுறுத்தல்களின் படியே இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களுவன்கேணி கிராமத்தில் விவசாயப்பண்ணை

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று பிரதேச செயலார் பிரிலிலுள்ள களுவங்கேணி கிராமத்தில் ஜரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் வீ எபக்ட் நிறுவனத்தினூடாக காவியா பெண்கள் அமைப்பினால் செயற்படுத்தப்பட்ட கிராமிய பெண்கள் கூட்டுறவுடன் உருவான விவசாயப் பண்ணையினை திறந்துவைக்கும் நிகழ்வு 23.09.2020 (புதன்கிழமை) அன்று இடம்பெற்றது.

காவியா பெண்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி. யோகமலர் அஜித்குமார் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் வீ எபக்ட் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் திரு.ரி.மயூரன், தேசிய திட்ட இணைப்பாளர் திரு: பிரியந்த ஜயக்கொடி, மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தங்கவேல், வீ எபக்ட் நிறுவனத்தின் நிதி முகாமையாளர் திரு. புவுது பெரேரா மற்றும் பிரதேச சபை வட்டார உறுப்பினர், பொருளாதார உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அமைப்பின் பிரதிநிதிகள், பெண்கள் கூட்டுவு சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட குறைந்த குடும்ப வருமானத்தைப் பெற்றுவரும் குடும்பங்களின் பொருளாதாரத்தையும் மற்றும் அவர்களது கல்வி, சுகாதாரம் போன்றவற்றை வலுப்படுத்தும் நோக்கில் நிலைத்து நிற்கக்கூடிய திட்டமாக இத்திட்டம் வீ எபக்ட் நிறுவனத்தினூடாக காவியா பெண்கள் அமைப்பினால் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஓர் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் நலன் சார்ந்த விவசாயத் திட்டம் கைவிடப்பட்ட நிலையில் இருந்ததை அவதானித்த காவியா மற்றும் வீ எபக்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் பிரதேச செயலாளரின் அனுமதிக்கமைவாக அக் காணியில் இவ் விவசாயப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

களுவன்கேணி அலைமகள் சுயதொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் இவ் விவசாயப் பண்ணை மேற்கொள்ளப்படுவதுடன் இதனை காவியா பொண்கள் அமைப்பு கண்காணிப்பதுடன் அரச கூட்டுறவு நிறுவனம் அபிவிருத்திக்கான ஆலோசனைகளை எதிர்காலத்தில் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வியாபார உலகு

வலைதள உலாவுகையில்
இடை இடையே விளம்பரங்கள்
இல்லை இல்லை
விளம்பர வலைத்தளத்துள்
இடை இடை நாம்.....
பார்க்கும், கேட்கும்
பதிவிடும் யாவும்
பாரிய கம்பனிகளின்
முதலீட்டுத் தகவல்கள் ...
எம் எச்சிலை களவாடி
சுவையறிந்து
சூட்சுமமாய்
விற்றும் முடித்தீர் – உம்
உற்பத்திகளை ....
கொள்ளையிடுகிறீர்கள்
சொல்லிவிட்டு – சொல்லாது
கொள்ளையிட்ட பலதை
அறியாத அறிவிலீகள் நாம்...
எம் போன்களை
இரகசிய குறியீடுட்டு
பூட்டி வைத்தோம்..
போதாது பாதுகாப்வென்று
கை ரேகையும்
இட்டு வைத்தோம்
அயலில் யாரும்
அறியா வண்ணம்
இரகசியம் காத்து வைத்தோம்
அகிலத்தில் சில அரக்கரிடம்
அனைத்தையும் கொடுத்து விட்டு .....
ஓடுவோம் ஓடுவோம்
வாட்சப்பலிருந்து டெலிகிராமிற்கு
டெலிகிராமிலிருந்து சிக்னலுக்கு
சிக்னலிருந்து
வேறு வேறு எதற்கோ
எல்லாமே அவர்களது
தொழிலுட்ப உலகு
தொழிலுட்பத்திற்குள்
ஒழிந்துள்ள
வியாபார உலகு
என்பதை மறந்து.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னீர் மீன் விற்பனை நிலையம் திறந்து வைப்பு

மட்டக்களப்பில் உன்னிச்சை கலைமகள் கூட்டுறவு சங்கத்தினால் நன்னீர் மீன்களை சுத்தப்படுத்தி விற்பனை செய்யும் நிலையம் ஒன்று ஐரோப்பிய ஒன்றியம், வீ எபக்ட் நிறுவனத்தினூடாக காவியா பெண்கள் அமைப்பினால் 23.12.2020 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

காவியா அமைப்பானது கிராம மக்களை ஒன்றிணைத்து அவர்களுக்குள் கூட்டுறவு சங்கங்களை அமைத்து அதனுடன் தொடர்புடையதாக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது, அதில் ஒரு செயற்பாடாக பொது வியாபார முயற்சி ஒன்றினை ஆரம்பித்தல், அதனூடாக வருமானம் ஈட்டுதல் ஒன்றாகும்.

இதுவரை அவ்வகையில் குறிஞ்சாமுனையில் அரிசி ஆலையும், நெல்லிக்காட்டில் பயிர்வகை உற்பத்தி நிலையமும், களுவன்கேணியில் விவசாய பண்ணை போன்றனவும் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் தற்போது உன்னிச்சையிலும் நன்னீர் மீன்களை சுத்தப்படுத்தி விற்பனை செய்யும் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உன்னிச்சை கிராம மக்கள் பெரும்பான்மையாக நன்னீர் மீன்பிடி தொழிலினையே செய்து வருகின்றனர். எனினும் அதன் மூலம் பெறுகின்ற வருமானம் போதாத நிலையில், இந்த சுத்தப்படுத்தி பொதி செய்யப்பட்ட மீன் விற்பனை நிலையத்தின் மூலமாக குறித்த சங்கத்து உறுப்பினர்களின் வருமானம் அதிகரிப்பதுடன், பொதுமக்களும் சுத்தமான பொதி செய்யப்பட்ட மீன்களை நுகர முடியும் என்பது உறுதி.

கூட்டுறவு சங்கமானது சேமித்தல், சேமிப்புகளை உறுப்பினர்களுக்கு முதலீட்டு கடன்களாக வழங்குதல், சீரான கணக்கேடுகளை பேணுதல் என மிகச் சிறப்பாக இயங்கி வருகின்ற நிலையில் இவ் உற்பத்தி வருமானத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை மீள் முதலீடாக்கல் மூலம் எதிர்வரும் காலத்தில் இன்னம் விருத்தியடைந்த வியாபாரமாக இதனை தங்களால் மாற்ற முடியும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியா நிறுவனத்தின் ஊடாக இயங்கி வரும் கூட்டுறவு சங்கமாகிய நெல்லிக்காடு புன்னகை கூட்டுறவு சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பயிர்வகை உற்பத்தி நிறுவனமானது தற்போது அழகுற காட்சியளிக்கின்றது. இதில் முதற்கட்டமாக நாற்று மேடைகள் இடப்பட்டு மரவள்ளி, கச்சான் மற்றும் படர் கொடிகள் நடப்பட்டன. அவை வளர்ந்து அவ்வயல் சூழலுடன் பச்சை நிறத்துடன் பச்சையாக வளர்ந்து நிற்கின்றன.

கூட்டுறவு சங்க மக்களும் ஒற்றுமையாக பணி புரிந்து அவர்கள் வருமானம் ஈட்டக்கூடிய கூட்டுறவு சுய முயற்சி ஒன்றினை மேற்கொண்டிருப்பதானது எதிர்காலத்தில் புன்னகை கூட்டுறவு சங்கமானது அதி உயர் நலன்களை அடைவதற்கான வழியாகும்.

அதிகமாக இயற்கை உரங்கள், பாரம்பரிய கிருமி அகற்றல் முறைகள் மூலமாக சூழலுக்கு நேயமான விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு இவ் உற்பத்திகளில் வெற்றி கண்டிருப்பதானது எதிர்கால வளமான உற்பத்தி முறைக்கான ஒரு உதாரணமாக கொண்டு ஏனைய கூடட்டுறவு சங்களும் இவ்வாறு வெற்றி அடைய முடியும் என்பது உறுதி.

காவியா அமைப்பினால் ஒழுங்கு செய்த பல பயிற்சிகள், வெளியீட்டு வருகைகள் (Exposal visit) போன்றவற்றில் கலந்து கொண்டதன் மூலமாகவே இவர்களால் பல தடைகள் வந்த பொழுதும் இவ் பயிர்வகை உற்பத்தி நிலையத்தை வெற்றிகரமாக நடாத்த முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறை இல்லா வாழ்வு

என் தாயை என் அப்பா
அடிக்கும் போது
எமக்குள் எழும் கவலை
என்னவளை
நாம் அடிக்கும் போது
ஏன் எழுவதில்லை...

இவையனைத்தும்
எழுதப்படாத
விதியாகிப்போகிறதோ
எம் சமூகத்தில்...

பிறந்தது தொட்டே
இங்கு பாகுபாடு
வளர்வதில் கூட–பல
வரையறை பெண்ணுக்கு
அதை வகுக்கும் அதிகாரம்
யார் கொடுத்தார் இங்கு...



வன்முறை இல்லாத உலகு
அவ்வளவு அழகானது
பட்டாம் பூச்சிகள் சூழ்ந்த
பூந்தோட்டம் போன்று
பூமிக்கு மேலும் அழகு சேர்ப்பது...

வன்முறை இல்லாத வாழ்வு
எனக்கானது
என்னைச் சூழ்ந்தோரையும்
வாழ வைப்பது – அது
என்னிலிருந்து ஆரம்பமாவது
எனக்கும் – என்
சமூகத்திற்கும் தேவையானது
அதுவே தீர்வுமானது....

சி.ஜெயபிரதாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் சார்ந்த சமூகப்பிரச்சினைகள்

சமூகத்தில் தோன்றுகின்ற பொதுவான சிக்கல்கள், பிரச்சினைகள், குழப்பங்கள், முறைகேடுகள், ஒடுங்குமுறைகள், சட்ட மீறுகைகள், பிறழ்வு நடத்தைகள் போன்றவற்றை சமூகப்பிரச்சினைகள் எனலாம். பெண் பிரச்சினைகளை பற்றி பேசுதல் மற்றும் சமூக நீதி, அடக்குமுறை, சிறுவர் உரிமை தொடர்பாக உரையாடுதல் என்பது முக்கியமானதாகும். இத்தகைய சமூக பிரச்சினைகளை கண்ணாடிபோல் மக்களுக்கு எடுத்துக்காட்டி மக்களை விழிப்புணர்வு அடையச் செய்யும் செயற்பாடுகளை கவிதை, சிறுகதை, நாடகம், சுவரொட்டி, ஓவியம், பாடல்கள் மற்றும் சஞ்சிகை என பல்வேறுப்பட்ட வடிவங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

அரசுகள் பெண்களின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் ஆழமான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆனாலும் பெருமளவுக்கு அரசு இதனை செய்யத் தவறியுள்ளன. பெண்கள் மரபு சாரந்த நம்பிக்கைகளை கடந்து பெண்களை சமத்துவமான முறையில் உள்வாங்குவது, பெண்களுக்கான அந்தஸ்த்துக்களை நடைமுறைப் படுத்துவதனை உத்தரவாதப்படுத்தல் மற்றும் பெண்கள் பொதுவாக ஆளுமை நிலைப்படுத்தப்பட்டு வளர்க்கப்படுகின்ற பண்பும் இங்கு காணப்படுகின்றது.

ஆகவே இவற்றையெல்லாம் தகர்த்துப் பெண்களை ஆள்நிலைப்படுத்துகின்ற பொறுப்பினை உலகளாவிய ரீதியில் பெண்ணிலைவாதமும், பெண்ணிலைவாத இயக்கங்களும் எடுத்திருக்கின்றன.

இன்று எம்மத்தியில் பெண்விடுதலை, பெண்ணிலைவாதம் என்பன குறித்து பரவலாகப் பேசப்படுகின்றது. இன்று காணப்படும் பெண்கள் மீதான சகல சமூக, பொருளாதார, கலாசார ஒடுக்கு முறைகளைக் கலைவதற்கு, பெண் என்பதால் வேறுபாடு காட்டாமல் மனித ஜீவி என்ற வகையில் உரிமையும், உரிமைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமும் மற்றும் போராட்டமும் அப்போராட்டத்திற்கான வழிமுறைகளும் பெண்ணிலைவாதத்தின் முக்கிய நோக்கங்களாகும். பெண்ணிலைவாதம் என்ற சொல்லானது 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதன்முதலாக உருவாக்கப்பட்டது. இவை பெண்களின் ஜனநாயக உரிமைகளுக்குமான போராட்டத்தையே குறிக்கின்றது. அதாவது கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகள், சொத்துடைமைக்கான உரிமை, வாக்களிக்கும் உரிமை, பாராளுமன்றத்திற்குச் செல்லும் உரிமை, பிறப்புக்கட்டுப்பாடு செய்யும் உரிமை, விவாகரத்து செய்யும் உரிமை போன்ற ஏனைய பெண்களுக்கு எதிராக பல வன்செயல்கள் இடம் பெறுகின்றன. அதாவது பெண்கள் வீட்டில் ஆண்களுக்கு கீழ்படிதல், குடும்ப அமைப்பினால் பெண்கள் சுரண்டப்படுதல், தொழிலிலும், சமூகத்திலும், நாட்டின் கலாசாரத்திலும் பெண்கள் தொடர்ந்தும் குறைவான அந்தஸ்துடன் நடத்துதல் போன்றவற்றை எதிர்த்து போராட்டங்களையும் உள்ளடக்கியதாக இன்று காணப்படுகின்றது. பெண்கள் இவற்றையெல்லாம் கடந்து செல்வதற்கு பெண்கள் விழிப்புணர்வு பெற்று பெண் தலைமைத்துவத்தினை உருவாக்குதல் வேண்டும். பெண்கள் குடும்பத்திற்கு சேவை செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்ற விதி காலங்காலமாக கீழைத்தேய சமூகங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றது. தீர்மானம் எடுக்கும் செயன் முறையில் இருந்து அவர்கள் ஒதுக்கப்படுவார்கள். அவர்களுடைய செயற்பாடு குடும்பம் என்ற குறுகிய வட்டத்தினுள் அடக்கப்படுகின்றது



இலங்கையில் பெண்களின் பிரதிநிதித்துவம் ஏனைய துறைகளோடு ஒப்பிட்டு நோக்கும் போது குறைவாகவே உள்ளது. சுதந்திரத்தின் பின்னர் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்றவைகளில் பெண்கள் அதிகளவு கவனம் செலுத்துகின்றார்கள். முன்னேற்றம் அடைந்துவந்த ஆண்களுக்கு நிகரான அளவிற்கு இத்துறைகளில் பெண்களின் பங்களிப்பு காணப்படுகின்றது. இதற்கு அவர்கள் சமூக, பொருளாதார ரீதியாக எதிர்நோக்கும் தடைகளே காரணமாகும். அந்த வகையில் பெண்களின் உடனடி மாற்றங்கள் எதனையும் பாதிக்கவில்லை. பெண்கள் தம் பங்குபற்றுதலுக்கு சுயமான அல்லது தனித்துவமான ஆளுமையினைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகித்து முன்வருவதில் பெண்கள் தயக்கம் காட்டி வருகின்றார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்களின் சந்தர்ப்ப சூழ்நிலைகளே காரணமாக அமைந்துள்ளன. இதற்காக குடும்பப் பின்னணி, ஆண் வழி, உறவு வழி தலைவர்களின் ஆதரவு அல்லது பிரிவு என்பனவே பெண்களின் வெற்றி, தோல்வி பிரவேச பாதையில் முக்கிய காரணியாகியுள்ளது. இவ்வாறு வருகின்றவர்கள் எவ்வித சந்தேகமும் இன்றி மிகவும் திறமையாக செயற்பட்டுள்ளார்கள். ஆனாலும் இவர்களின் பிரவேசத்திற்கான மூல சந்தர்ப்பம் குடும்பப் பின்னணியும், ஆதரவுமேயாகும். இவ் அனுபவம் அல்லது கலாசாரம் இலங்கைக்கு மட்டும் உரியதல்ல மற்றும் இலங்கைக்கு மட்டும் பொருந்தக் கூடியதுமல்ல. பதிலாக உலக நாடுகள் பலவற்றில் இக்கலாசாரம் காணப்படுகின்றது. தென்னாசிய பிராந்தியமானது இறுக்கமான சமூகக்கட்டமைப்பைக் கொண்டதாகும். ஆட்சியாளன் என்பவன் ஆணாகவே இருக்க வேண்டும் என்ற நியதி வரலாற்றுக் காலம் தொடக்கம் இருந்து வருகின்றது.

மத ரீதியான மரபுப் பழக்க வழக்கங்கள் மக்களால் காலம் காலமாக பின் பற்றப்பட்டு வருகின்றது. இதற்கமைய ஒவ்வொரு மதமும் தம்மளவிலான மரபுகளை பின்பற்றி வருகின்றன. சமயங்களிலும் பெண்களுக்கெதிரான பல்வேறு கட்டுப்பாடுகளும் அடக்கு முறைகளும் எடுத்துக் கூறப்பட்டு பெண்களின் சுதந்திரத்திற்கும் பங்கம் ஏற்படும் வண்ணம் அவர்களின் சுகந்திர செயற்பாடுகளில் பங்குகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.



பெண்கள் மீதான குடும்பப் பொறுப்பும் பெண்கள் பங்குபற்றுதல் குறைவானமைக்கு காரணமாகப் பார்க்கப்படுகின்றது. அதாவது "குடும்பம் என்ற அலகு மனித விழுமியத்தின் ஒரு மூலமாக இருப்பினும் இக்குடும்பமே பெண்களுக்கு எதிரான வன்முறை விளையும் ஒரு விளைநிலமாக இருக்கின்றது." மேலும் இக்குடும்பங்களில் பெண் வேலைக்கு செல்லாதவர்களாக இருப்பின் ஏனைய அனைத்து வீட்டு வேலைகள் மற்றும் குடும்பப் பொறுப்பை சுமக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆண்கள் வெறுமனமே வேலைக்கு போய் பணம் சம்பாதிப்பவர்களாகவே மட்டும் இருக்கின்றனர். எனவே குடும்பத்தில் இவ்வாறான பல்வேறு சிக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை காணப்படுகின்ற போது பெண்கள் பங்குபற்றுவதற்கோ தீர்மானம் எடுக்கும் செயன்முறையையோ மேற்கொள்ள முடியாதவர்களாக உருவாக்கப்படுகின்றார்கள். உயர்மட்ட பதவிகளில் ஆண்கள் இருக்கின்றமை பெண்கள் உயர் பதவிகளுக்கு வந்தால் எமக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை போன்ற மனோபாவங்களும் காணப்படுகின்றமையானது பெண்களுக்கு தீர்மானம் எடுத்தல் செயற்பாடு மிகவும் தாமதமாகவே காணப்படுகின்றது.

அத்தோடு எந்தவொரு தீர்மானம் எடுக்கும் செயன்முறையிலும் ஆண்களின் மேலாதிக்கமே காணப்படுகின்றது. இதனால் பெண்கள் தமக்கு சார்பான அல்லது பெண்கள் தொடர்பான எந்தவொரு விடயத்தினையோ சட்டத்தினையோ கொண்டுவர முடியாத நிலை நடைமுறையில் காணப்படுகின்றது. சமத்துவம் என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானதும் மிக முக்கியமானதும் ஆகும். ஆண்கள் ஒத்துழைப்பை வழங்குவதில் பாரபட்சமின்றி செயற்படுத்தவும் ஆண், பெண் சமத்துவத்தினை நடைமுறையில் காணவும், அனுபவிக்கவும், நடைமுறை ப்படுத்தவும் முடியும். "எமது சமூகம் பெண்களின் தலைமைத்துவத்தினை பழி தூற்றாமல் இருக்க வேண்டும் அப்போது தான் பெண்கள் ஆர்வத்துடனும் தன்னம்பிக்கையுடனும் ஈடுபடக் கூடும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் கனவு

என் நெஞ்சு படபடத்துக் கொண்டிருக்கிறது. என் வாழ்க்கை, என் கனவு, என் இலட்சியம் எல்லாம் முடிவடையப் போகின்றதே என்ற ஏக்கம் என்மனதில் ஓடிக்கொண்டிருந்தது. நான் திருமணப்பந்தலில் உட்கார்ந்து கொண்டிருக்கின்றேன். என்னால் ஒரு முடிவும் எடுக்க முடியவில்லை. தாலி என்னும் வேலி என் கழுத்தை நெரிக்க என்னை நோக்கி வருகின்றது. அதன் மத்தயில் அகோர சத்தம் என்னை ஆட்கொள்கிறது. முடிந்து விட்டது என்வாழ்க்கை. கண்களில் ஆனந்தக் கண்ணீருக்குப் பதிலாக இரத்தக் கண்ணீர் வடிந்தோட எழுந்து நின்று ஆசிர்வாதம் வாங்கினேன் என் வீட்டாரிடமும், மாப்பிளை வீட்டாரிடமும் படித்துக்கொண்டிருக்கும் போது திடீரென்று அப்பாவுக்கு ஏற்பட்ட கார்ட் அட்டக்கினால் என்னுடைய வாழ்க்கை எனும் முடிவை அவர் எடுத்துவிட்டார். "நான் கண் மூடுவதற்குள் உன்னை கல்யாணம் செய்து வச்சுப் பார்க்கணும் என்று சொல்லிப்போட்டார் என் அப்பா". உடனே அவசரத்தில் மாப்பிள்ளை தேட முடியாமல் வைத்தியசாலையில் அப்பா தன் அருகிருந்த அவரது நண்பனிடம் கேட்டார் என் மகளை உன் மகனுக்கு கட்டி வைக்கிறாயா? உனக்கு சம்மதமா என்று . அவரும் உடனே மண்டைய ஆட்டிவிட்டார். அப்பா இருந்த நிலைக்கு அந்த இடத்தில் என்னால் எந்த மறுப்பும் தெரிவிக்க முடியாமல் போய்விட்டது. பையன் வெளிநாட்டில் நல்ல சம்பளத்துக்கு வேலை பார்க்கிறான். நீ அங்கதான் போய் இருக்கவேண்டும் என்று வேறு சொல்லிட்டார்கள். என்னால் இதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. இருந்தும் என் அப்பாவுக்காக ஒரு சிறு துளியும் விருப்பம் இல்லாமல் இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தேன்.

மாப்பிள்ளை அப்பாவின் நண்பர் மகன் என்பதால் நல்ல பையன் என்று தெரியும் இருந்தாலும் நான் படிச்ச படிப்ப விட்டுத்து வெளிநாடு போக எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் கூட விருப்பமில்லை. இனி நான் என்ன செய்ய? தாலி என் கழுத்தில் ஏறிவிட்டதே. என்னை நான் மாற்றிக்கொள்ள முயற்சிக்கிறேன் என்று நினைத்துக்கொண்டு அவருடன் வெளிநாடு செல்ல முற்பட்டேன். அந்நாடு எனக்குத் தனிமையைக் கொடுத்தது. என் அப்பா, அம்மா, தங்கை, தம்பி என்று ஒரு வீட்டில் எல்லோருடனும் கலகலவென்று வாழ்ந்த எனக்கு இந்தவீடு தனிமையை மட்டும் தந்தது. என்னோடு சிரித்துப் பேச நான்கு சுவர்களுக்குள் யாரும் இருக்கவில்லை. அதற்காக எனது கணவரை கொடுமைக்காரன் என நினைத்துவிடாதீர்கள். என்மேல் அதிக அக்கறையுடையவராக அவர் இருந்தார். என்னை நன்றாகப் பார்த்துக் கொண்டார். இருந்தும் எனக்குத்தான் அவருடன் பெரிதாக முகம் கொடுத்துப் பேச விருப்பம் வரவில்லை. அவர் வேலைக்குச் சென்று வரும் வரை நான் தனிமையில் தான் இருக்க வேண்டி இருந்தது. சொந்தம் என்று சொல்லிக் கொள்ள அங்கு யாரும் இருக்கவில்லை. நாட்கள் நகர நகர நானும் அவருடன் சிறிது சிரித்துப்பேச முற்பட்டேன். அதன் பின்னர் அவர் எனக்குப் பிடித்த ஒவ்வொரு விடயத்தையும் எனக்குத் தெரியாமலே செய்தார். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. எப்படி எனக்கு இவையெல்லாம் பிடிக்கும் எனக்கேட்டால் உங்கள் வீட்டாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன் என்பார். எனக்கு அவர் மீது மரியாதை ஏற்பட்டது. அவரோடு சகஜமாக பேசிப் பழகினேன். என் கோபம், மகிழ்ச்சி எல்லாவற்றையும் அவருடன் பகிர்ந்து கொண்டேன். என் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றிப் பேசுவதற்காக ஒரு நாள் அவர் வேலை விட்டு வரும் வரை காத்துக்கொண்டிருந்தேன்.

அந்தச் சம்பத்தைச் சொல்வதா, இல்லை சொல்லாமல் விடுவதா, சொன்னால் அடுத்து என்ன நடக்கும்? சொல்லாவிட்டால் ஒருவேளை அவருக்குத் தெரிகின்ற போது நான் மறைத்ததை நினைத்து அவர் என்ன செய்வார் என்று பல கேள்விகள் அவர் வரும் வரையில் என்னுள் ஓடிக்கொண்டிருந்தன. அவரும் வந்துவிட்டார். ஆனால் எனக்கு அந்தச் சம்பவத்தைச் சொல்லத் தைரியம் இல்லாமலும் தயக்கமாகவும் இருந்தது. இருந்தும் இன்று சொல்லியே ஆகவேண்டும் என்று அவரை நோக்கி நகர்ந்தேன். நான் உங்களிடம் ஒன்று சொல்ல வெண்டும் என்று உடனே கூறினேன். என்ன சொல் என்றார். தொண்டைக் குழியில் உமிழ் நீர் வந்து சிக்கியது. இந்தச் சகுனம், சொல்ல வேண்டாம் என்ற அறிகுறியோ என்று கூடச் சிறிது யோசித்தேன். உடனே அவர் என்னைத் தட்டி என்ன சொல்ல வந்தாய் என்று கேட்டார். நான் என்னவானாலும் பரவாயில்லை சொல்லியே ஆகவேண்டும் என்ற எண்ணத்தில் நான் படித்து முடித்ததும் ஒரு வருடத்தில் வேலை கிடைத்தது. அந்த ஒரு வருடத்திற்குள்ளே காதலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. அவனும் என்னைக் காதலித்தான். அவன் என்னை உண்மையாக காதலித்தான் என்று தான் நினைத்தேன். ஆனால் அடுத்த வருடத்திலே காதல் முடிவு பரிசாகக் கிடைத்தது எனக்கு. இவ்வாறு சொல்லி முடித்து என் கணவரின் முகத்தை அண்ணார்ந்து பார்க்கிறேன் எள்ளுப் போட்டாலும் பொரியாத அளவிற்கு அவர் முகம் விகாரமடைந்து கோப உணர்வோடு என்னருகில் வந்தார்.

என் கை, கால் எல்லாம் படபடத்தது. என்ன நடக்கப் போகின்றதோ என்ற பயம் என் மனதில் குடிகொண்டிருந்தது. சிவந்திருந்த அவரது முகம் உடனே சிரித்த முகமாக மாறியது. என்ன இது கோபப்பட்டவர் சிரிக்கிறாரே என்று எனக்குள் ஒரு கேள்வி. அவர் என் தோளில் கையை வைத்து இதுதானா அந்த விடயம். இதைச் சொல்லத்தானா நீ அவ்வளவு பயப்பட்டாய். இந்த விடயம் எனக்குப் அப்போதே தெரியும் என்றார். நான் உடனே யார் அப்பாவா சொன்னார் என்று கேட்டேன். இல்லை உன்னை நான் காதலிக்கும் போது தெரிந்துகொண்டேன் என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் சிரித்துக் கொண்டு உன் அப்பாவும் என் அப்பாவும் நண்பர்கள் என்பதால் நாம் இருவரும் சிறுவயதில் அடிக்கடி சந்தித்துக் கொள்வோம், சண்டையும் போட்டுக் கொள்வோம். ஆனால் என் அப்பாவிற்கு வேறு இடத்தில் வேலை கிடைத்ததால் இருவரும் பிரியவேண்டியதாயிற்று.

பின்னர் பல வருடங்களிற்கு பிறகு ஏதோவொரு வைபவத்தில் உன்னைச் சந்திக்க நேர்ந்தது. யார் இது இவ்வளவு அழகாக இருக்கிறாளே என விசாரித்தால் நீதான் அது. உன்னோடு நான் வந்து பேசினேன். ஆனால் நீ என்னை துளி கூட ஞாபகம் வைத்திருக்கவில்லை.

நாம் சிறுவயதில் விளையாடிய நினைவுகள், இருவரும் போட்டுக்கொண்ட சண்டைகள் ஒன்றும் உனக்கு ஞாபகத்தில் இல்லை. உன் அப்பாவின் நண்பருடைய மகன் என்பது மட்டும் உனக்குத் தெரிந்திருந்தது. இருந்தும் உன்னைப் பார்த்ததில் எனக்கு ஒரு மகிழ்ச்சி. அதன் பின்னர் உன்னைப் பற்றி அறிவதற்காக பேஸ் புக், இன்ஸ்டாகிராம் போன்றவற்றில் உன்னைப் பின்தொடர்ந்தேன். அதன் பின்னர் தான் தெரிந்தது நீ இன்னுமொருவரை பின்தொடர்கின்றாய். அவரைக்காதலிக்கின்றாய் என்பது பற்றி. என் மனதில் ஓர் ஏக்கம் மட்டுமல்ல ஓர் ஏமாற்றமும் கூட. அதன் பின்னர் இங்கிருக்க விருப்பமில்லாதவனாய் வெளிநாடு வந்துவிட்டேன். கொஞ்சநாளைக்குப் பிறகு தெரிந்தது அந்நபர் உன்னை ஏமாற்றிவிட்டார் என்று. அதனால் நீ அடைந்த வேதனைகளையும் அறிந்துகொண்டேன். இருந்தும் மனதிற்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டற்ற மகிழ்ச்சி ஒன்று. உன் அப்பாவிற்கு திடீரென்று சுகயீனம் என்றதும் என் நண்பன் அழைத்துக் கூறினார். நான் என் அப்பாவை உடனடியாக அங்கே செல்லச் சொன்னேன். என்ன, என் அப்பா ஆர்வக் கோளாறில் என்னைப் பற்றிப் பேசி என் மகனை உன் மகளுக்கு திருமணம் செய்து வைப்போமா என்றோ அல்லது உன் அப்பா, உன் மகனை என் மகளுக்கு திருமணம் செய்து வைப்போமோ என்றோ கேட்டு என் ஆசையைப் பூர்த்தி செய்து விடமாட்டார்களோ என்ற நப்பாசைதான். ஆனால் வாழ்க்கையில் நான் ஆசைப்பட்ட எதுவுமே உடனடியாக கிடைத்துவிடாத எனக்கு உன் அப்பாவின் சுகயீனம் கவலைதரக்கூடியதாக இருந்தாலும் அவர் எடுத்த முடிவு என்னை இன்பத்தில் ஆழ்த்தியது. நான் உனக்காக காத்திருந்தமைக்கான பலன் கிடைத்துவிட்டது என்று கருதிச் சந்தோசப்பட்டேன். உன்னைத் திருமணம் செய்து கொண்டு உன்னோடு வாழ்வது என்னும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. காரணம் நான் விரும்பிய வாழ்க்கை எனக்கு கிடைத்துவிட்டது என்பதுதான்.

அதேநேரத்தில் என் விருப்பத்தை நிறைவேற்ற வந்த உன்னை, நான் நன்றாகப் பார்த்துக் கொள்ளத்தானே வேண்டும் என்று அவர் கூறி முடிப்பதற்குள் என் கண்களில் இருந்து கண்ணீர் சொட்ட ஓடிப்போய் அவரை கட்டியணைக்கும் போது கண்விழித்துப்பார்த்தால் பக்கத்தில் யாருமில்லை. கனவா? மதியம் ஒன்றரை மணி இருக்கும் சாப்பிட்டுவிட்டு பரீட்சைக்கு படித்துக்கொண்டிருக்கும் போது தூக்கம் வர அசதியில் தூங்கிவிட்டேன். ஆனால் இந்தக் கனவில் கண்ட விடயங்களை எல்லாம் எங்கோ பார்த்திருக்கிறேனே? ஞாபகத்தில் வருதில்லையே. அட ஆமா அன்றொருநாள் பார்த்த அ...ஆ குறும்படக் கதைதானே இது. கிட்டத்தட்ட அந்தப் படக் கதை மாதிரித்தான் நான் கண்ட கனவும். நம்ம வாழ்க்கையிலும் இப்படி நடந்தால் நன்றாக இருக்கும். ஆனால் பகல் கனவு பலிக்காது என்று சொல்வாங்க நான் பார்த்த அ...ஆ குறும்படக் கதையானது வேறு வழியில்லாமல் திருமணத்திற்கு தள்ளப்பட்ட ஒரு பெண்ணைப் பற்றிச் சொல்லப்படுகிறது. அப்படியான ஒரு பெண் அன்பைக் கண்டுபிடித்தாளா? அல்லது அதிலிருந்து விடுபட்டாளா? என்பது போல் கதை அமையப் பெற்றிருக்கிறது. இந்தக் குறும்படத்தைப் பார்க்கும் போது மேலும் பல விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். பெரிதாக படத்தில் நாட்டமில்லாத நான் அப்படத்தை பார்த்துவிட்டு நல்ல கதையாக இருக்கிறது என்று கூறி என் நண்பர்களையும் பார்க்கச் சொன்னேன். இக்குறும்படக் கதைக்களத்தில் உள்ள அத்தனை விடயங்களையும் ஒப்புவிக்காமல் அதன் சாராம்சத்தை எடுத்து என்னுள் தோன்றிய கற்பனையையும் கொண்டு இக்கதையை எழுதியிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாயிரத்தி பதினெட்டாம் ஆண்டு தமிழ் குறும்படப்படப் போட்டியில் முதலிடத்தைத் தட்டிக் கொண்ட இக்குறும்படத்தினை கிருத்திகா பாஸ்கர் இயக்கியிருக்கிறார். இதில் மில்ரன் ஜோசப், யாழினி கந்தேஸ்வரி மற்றும் ரேகா ஸ்ரீனிவாசன் போன்றோர் நடித்துள்ளனர். இக்குறும்படத்தை மேலும் மெருகூட்ட சஸாங்க் சிவசுப்பிரமணியம் இசை அமைத்திருக்கிறார். அதுமட்டுமன்றி நியூசிலாந்து நாட்டை மையமாகக் கொண்டு மிகப் பெரிய அளவில் அன்றி கதைக்கு தேவையான வகையிலான ஒளிப்பதிவினை பாஸ்கர் நாகராஜன் மற்றும் கீதன் சுந்தர் மேற்கொண்டிருக்கின்றனர். இந்தக் குறும்படம் ஏனைய படங்களைப் போல் பார்ப்பதற்குச் சாதாரணமாக இருந்தாலும் வாழ்க்கையில் நிறைய சாதிக்கத் துணிந்து தோல்வி கண்ட பெண்களுக்கு எல்லாம் பிரமாண்டமானதாகவும் ஒன்றில் தோற்றால் இன்னொன்றில் வெல்லலாம் என்பதை எடுத்துக் கூறுவதாகவும் அமைந்திருக்கிறது.

தெ. பேபிசாளினி
கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை விவசாயம்

நாம் வாழும் பூமியானது நாளுக்கு நாள் மாசடைகின்றது. அதற்கான அதிக காரணங்களாக மனித நடவடிக்கைகளே காணப்படுகின்றன. இச்செயற்பாடுகள் மூலமாக இப்பூமியானது சூழல் சமநிலையினை இழந்து இயற்கை அழிவுகள் பலவற்றை சந்தித்து வருகின்றமை யதார்த்தமே. இவ்வாறான நிலைமையில் நாம் சூழல் பற்றி சிந்திக்காதவர்களாகவும், சூழலுடன் நேயம் இல்லாதவர்கள் போன்றும் நடந்து கொள்ளலானது முழு உலகினையும் உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த இடமா என்ற கேள்வியினை எழுப்புகின்ற விடயமாகவே அமையும் என்பது உண்மை.

உலகை அழகாக்குகின்ற விடயமாக விவசாயம் அமைகின்றது, கண்களை பறிக்கும் பச்சை நிறம், மழையை பெய்ய வைக்கும் கருவி, பறவைளின் உணவு பெறும் இடம் மற்றும் பூச்சிகளின் வாழிடம் என உயிர் பல்வகமைக்கு இன்றியமையாதது விவசாய பெரு நிலங்களே ஆகும். இருந்தும் இன்றைய சூழலின் இயற்கைப் பல்வகமையைக் குழப்புகின்ற பிரதான கருவியாக இந்த விவசாய நடவடிக்கைகளே அமைகின்றதானது கவலைக்குரிய விடயமே.

அதிகரித்த செயற்கை உரம், வளமாக்கி எண்ணெய் என பல்வேறு இரசாயனங்களை தன்னகத்தே கொண்டதாகவே உற்பத்திகள் இன்று எம் கைகளுக்கு கிடைக்கின்றன, இவ்வாறாக முற்றிலும் நஞ்சினை வாங்கியே உண்டு வருகின்றோம். அவ் இரசாயனங்களை பல்தேசிய கம்பனிகளானது பல்வேறு தளங்களினூடாக விற்றலும் அதனை வாங்கி உண்கின்ற நாம் பல்வேறு நோய்களுக்கு ஆளாகுதல், பிற்பாடாக அதற்குரிய மருந்துகள் என எம் பணங்களை எம்மை அறியாதவாறே முழுமையாக இழந்து விடுகின்றோம்.

நாம் பல உணவுகளை வாங்கி உண்கின்றோம், உற்பத்தி செய்தும் உண்கின்றோம் அவ் உற்பத்திகளை கேள்வி கேட்க வேண்டிய கட்டாயத்தில் இன்று உள்ளோம். ஆரோக்கியத்திற்கான உணவுகள் என்று வாங்கி உண்கின்ற உணவுகளே ஆரோக்கியத்தை குறைகின்ற அளவு இரசாயனங்களால் இன்று விளைவிக்கப்படுகின்றன. விளைச்சலுக்கான விதைகள் இன்று எவர் கையிலோ இருக்க வாங்கி நடுபர்களாகவே நாம், எம் நிலங்களின் பெரும் பகுதிகள் தரிசாகி விட்டன. இவ்வாறான சூழலில் இயற்கை விவசாயங்கள் பற்றி பல தரப்பினர்களிடமும் எழுகின்ற ஆர்வமானது மிக அவசியமானதும் அவை சார்ந்து அனைவரும் செயற்படலும் முக்கியமாகும்.

தெ. பேபிசாளினி -கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் உண்டானால் இடம் உண்டு

பல்வேறு வெகுசன வெளிகளில் பெண்ணிலைவாதம் சார்ந்த உரையாடல்கள் நிகழ்த்தப்படும் நிலை மேற்கிழம்பியமை குறிப்பிடத்தக்காகும். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் காரணமாக உண்மையான விடயம் மூடி மறைக்கப்படும் பண்பாட்டிலிருந்து, இவ்விதமாக தொடர் செயற்பாடுகளால் புதிய எண்ணக்கருக்களின் முன்மொழிதல்களையும், பெண்களுக்கு எதிரான பாராபட்சங்களையும் இல்லாமல் செய்வதற்கான ஆக்கபூர்வமான போராட்டத்தினை வலுவூட்டும் கள அனுபவங்களையும் பெண்ணிலைவாதச் செயல்கள் வழங்கியுள்ளது.

தென்னாசிய சமுதாயத்தில் பெண்கள் பொதுவாக பல பிரச்சினைகளை சந்திக்கின்றார்கள். மரபு, கலாசாரம், நம்பிக்கைகள் மாற்று கருத்துக்கள் இவற்றுள் மிகவும் முக்கியமானவை. சமத்துவத்தினையும் நீதியையும் எல்லா பெண்களுக்கும் உறுதிப்படுத்துவது என்பது பாரிய பிரச்சினையாக உள்ளது. பொதுவாகவே தென்னாசிய சமுதாயம் மரபு சார்ந்த, பண்பாடு சார்ந்த, கலாசாரம் சார்ந்த விழுமியங்களால் கட்டமைக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். சட்ட ரீதியாக பெண்கள் தங்களுடைய ஜனநாயக உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு இவைகள் தடைகளாகவும் இருக்கின்றன. பொதுவாக பெண்கள் சார்ந்த கட்டமைக்கப்பட்ட பல விடயங்கள் கட்டவிழ்க்கப்பட வேண்டும்.

சமூகத்தில் தோன்றுகின்ற பொதுவான சிக்கல்கள், பிரச்சினைகள், குழப்பங்கள், முறைகேடுகள், ஒடுங்குமுறைகள், சட்ட மீறுகைகள், பிறழ்வு நடத்தைகள் போன்றவற்றை சமூகப்பிரச்சினைகள் எனலாம். பெண் பிரச்சினைகளை பற்றி பேசுதல் மற்றும் சமூக நீதி, அடக்குமுறை, சிறுவர் உரிமை தொடர்பாக உரையாடுதல் என்பது முக்கியமானதாகும். இத்தகைய சமூக பிரச்சினைகளை கண்ணாடிபோல் மக்களுக்கு எடுத்துக்காட்டி மக்களை விழிப்புணர்வு அடையச் செய்யும் செயற்பாடுகளை கவிதை, சிறுகதை, நாடகம், சுவரொட்டி, ஓவியம், பாடல்கள் மற்றும் சஞ்சிகை என பல்வேறுப்பட்ட வடிவங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையில் பெண்களின் பிரதிநிதித்துவம் ஏனைய துறைகளோடு ஒப்பிட்டு நோக்கும் போது குறைவாகவே உள்ளது. சுதந்திரத்தின் பின்னர் கல்வி, சுகாதாரம், வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் உண்டானால் இடம் உண்டு .....

வாய்ப்பு போன்றவைகளில் பெண்கள் அதிகளவு கவனம் செலுத்துகின்றார்கள். முன்னேற்றம அடைந்து வந்த ஆண்களுக்கு நிகரான அளவிற்கு இத்துறைகளில் பெண்களின் பங்களிப்பு காணப்படுகின்றது. இதற்கு அவர்கள் சமூக, பொருளாதார ரீதியாக எதிர்நோக்கும் தடைகளே காரணமாகும்.

அந்த வகையில் பெண்களின் உடனடி மாற்றங்கள் எதனையும் பாதிக்கவில்லை. பெண்கள் தம் பங்குபற்றுதலுக்கு சுயமான அல்லது தனித்துவமான ஆளுமையினைப் பிரயோகித்து முன்வருவதில் பெண்கள் தயக்கம் காட்டி வருகின்றார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்களின் சந்தர்ப்ப சூழ்நிலைகளே காரணமாக அமைந்துள்ளன. இதற்காக குடும்பப் பின்னணி, ஆண் வழி, உறவு வழி தலைவர்களின் ஆதரவு அல்லது பிரிவு என்பனவே பெண்களின் வெற்றி, தோல்வி பிரவேச பாதையில் முக்கிய காரணியாகியுள்ளது. இவ்வாறு வருகின்றவர்கள் எவ்வித சந்தேகமும் இன்றி மிகவும் திறமையாக செயற்பட்டுள்ளார்கள். ஆனாலும் இவர்களின் பிரவேசத்திற்கான மூல சந்தர்ப்பம் குடும்பப் பின்னணியும், ஆதரவுமேயாகும். இவ் அனுபவம் அல்லது கலாசாரம் இலங்கைக்கு மட்டும் உரியதல்ல மற்றும் இலங்கைக்கு மட்டும் பொருந்தக் கூடியதுமல்ல. பதிலாக உலக நாடுகள் பலவற்றில் இக்கலாசாரம் காணப்படுகின்றது. தென்னாசிய பிராந்தியமானது இறுக்கமான சமூகக்கட்டமைப்பைக் கொண்டதாகும். ஆட்சியாளன் என்பவன் ஆணாகவே இருக்க வேண்டும் என்ற நியதி வரலாற்றுக் காலம் தொடக்கம் இருந்து வருகின்றது.

மத ரீதியான மரபுப் பழக்க வழக்கங்கள் மக்களால் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. இதற்கமைய ஒவ்வொரு மதமும் தம்மளவிலான மரபுகளை பின்பற்றி வருகின்றன. சமயங்களிலும் பெண்களுக்கெதிரான பல்வேறு கட்டுப்பாடுகளும் அடக்குமுறைகளும் எடுத்துக் கூறப்பட்டு பெண்களின் சுதந்திரத்திற்கும் பங்கம் ஏற்படும் வண்ணம் அவர்களின் சுகந்திர செயற்பாடுகளில் பங்குகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

பெண்கள் மீதான குடும்பப் பொறுப்பும் பெண்கள் பங்குபற்றுதல் குறைவானமைக்கு காரணமாகப் பார்க்கப்படுகின்றது. அதாவது "குடும்பம் என்ற அலகு மனித விழுமியத்தின் ஒரு மூலமாக இருப்பினும் இக்குடும்பமே பெண்களுக்கு எதிரான வன்முறை விளையும் ஒரு விளைநிலமாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் உண்டானால் இடம் உண்டு .....

அரசுகள் பெண்களின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் ஆழமான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆனாலும் பெருமளவுக்கு அரசு இதனை செய்யத் தவறியுள்ளன. பெண்கள் மரபு சாரந்த நம்பிக்கைகளை கடந்து பெண்களை சமத்துவமான முறையில் உள்வாங்குவது, பெண்களுக்கான அந்தஸ்த்துக்களை நடைமுறைப்படுத்துவதனை உத்தரவாதப்படுத்தல் மற்றும் பெண்கள் பொதுவாக ஆளுமை நிலைப்படுத்தப்பட்டு வளர்க்கப்படுகின்ற பண்பும் இங்கு காணப்படுகின்றது. ஆகவே இவற்றையெல்லாம் தகர்த்துப் பெண்களை ஆள்நிலைப்படுத்துகின்ற பொறுப்பினை உலகளாவிய ரீதியில் பெண்ணிலைவாதமும், பெண்ணிலைவாத இயக்கங்களும் எடுத்திருக்கின்றன.

இன்று எம்மத்தியில் பெண்விடுதலை, பெண்ணிலைவாதம் என்பன குறித்து பரவலாகப் பேசப்படுகின்றது. இன்று காணப்படும் பெண்கள் மீதான சகல சமூக, பொருளாதார, கலாசார ஒடுக்கு முறைகளைக் கலைவதற்கு, பெண் என்பதால் வேறுபாடு காட்டாமல் மனித ஜீவி என்ற வகையில் உரிமையும், சுதந்திரமும் மற்றும் போராட்டமும் அப்போராட்டத்திற்கான வழிமுறைகளும் பெண்ணிலைவாதத்தின் முக்கிய நோக்கங்களாகும். பெண்ணிலைவாதம் என்ற சொல்லானது 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதன்முதலாக உருவாக்கப்பட்டது. இவை பெண்களின் ஜனநாயக உரிமைகளுக்குமான போராட்டத்தையே குறிக்கின்றது. அதாவது கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகள், சொத்துடைமைக்கான உரிமை, வாக்களிக்கும் உரிமை, பாராளுமன்றத்திற்குச் செல்லும் உரிமை, பிறப்புக்கட்டுப்பாடு செய்யும் உரிமை, விவாகரத்து செரிமைகளாகும்.

பெண்களுக்கு எதிராக பல வன்செயல்கள் இடம்பெறுகின்றன. அதாவது பெண்கள் வீட்டில் ஆண்களுக்கு கீழ்படிதல், குடும்ப அமைப்பினால் பெண்கள் சுரண்டப்படுதல், தொழிலிலும், சமூகத்திலும், நாட்டின் கலாசாரத்திலும் பெண்கள் தொடர்ந்தும் குறைவான அந்தஸ்துடன் நடத்துதல் போன்றவற்றை எதிர்த்து போராட்டங்களையும் உள்ளடக்கியதாக இன்று காணப்படுகின்றது. பெண்கள் இவற்றையெல்லாம் கடந்து செல்வதற்கு பெண்கள் விழிப்புணர்வு பெற்று பெண் தலைமைத்துவத்தினை உருவாக்குதல் வேண்டும். பெண்கள் குடும்பத்திற்கு சேவை செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்ற விதி காலங்காலமாக கீழைத்தேய சமூகங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றது. தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் இருந்து அவர்கள் ஒதுக்கப்படுவார்கள். அவர்களுடைய செயற்பாடு குடும்பம் என்ற குறுகிய வட்டத்தினுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இக்குடும்பங்களில் பெண் வேலைக்கு செல்லாதவர்களாக இருப்பின் ஏனைய அனைத்து வீட்டு வேலைகள் மற்றும் குடும்பப் பொறுப்பை சுமக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆண்கள் வெறுமனமே வேலைக்கு போய் பணம் சம்பாதிப்பவர்களாகவே மட்டும் இருக்கின்றனர். எனவே குடும்பத்தில் இவ்வாறான பல்வேறு சிக்கல் நிலை காணப்படுகின்ற போது பெண்கள் பங்குபற்றுவதற்கோ தீர்மானம் எடுக்கும் செயன்முறையையோ மேற்கொள்ள முடியாதவர்களாக உருவாக்கப்படுகின்றார்கள். உயர்மட்ட பதவிகளில் ஆண்கள் இருக்கின்றமை பெண்கள் உயர் பதவிகளுக்கு வந்தால் எமக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை போன்ற மனோபாவங்களும் காணப்படுகின்றமையானது பெண்களுக்கு தீர்மானம் எடுத்தல் செயற்பாடு மிகவும் தாமதமாகவே காணப்படுகின்றது.

அத்தோடு எந்தவொரு தீர்மானம் எடுக்கும் செயன்முறையிலும் ஆண்களின் மேலாதிக்கமே காணப்படுகின்றது. இதனால் பெண்கள் தமக்கு சார்பான அல்லது பெண்கள் தொடர்பான எந்தவொரு விடயத்தினையோ சட்டத்தினையோ கொண்டுவர முடியாத நிலை நடைமுறையில் காணப்படுகின்றது. சமத்துவம் என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானதும் மிக முக்கியமானதும் ஆகும். ஆண்கள் ஒத்துழைப்பை வழங்குவதில் பாரபட்சமின்றி செயற்படுத்தவும் ஆண், பெண் சமத்துவத்தினை நடைமுறையில் காணவும், அனுபவிக்கவும், நடைமுறைப்படுத்தவும் முடியும். "எமது சமூகம் பெண்களின் தலைமைத்துவத்தினை பழி தூற்றாமல் இருக்க வேண்டும் அப்போது தான் பெண்கள் ஆர்வத்துடனும் தன்னம்பிக்கையுடனும் ஈடுபடக் கூடும்."

ச.புஸ்பலதா
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மகிழ்ச்சியான குடும்பம் என்னிலிருந்து ஆரம்பிக்கிறது”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org